දුරකථන /தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා
அமைச்சர்
Minister } 2784832
Fax: 2784825

ලේකම්
செயலாளர்
Secretary } 2784812

කාර්යාලය
அலுவலகம்
Office } 2785141-50
Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.

'இசுருபாயா'
பத்தரமுல்ல.

"Isurupaya"
Battaramulla.

ඔබේ අංකය
உமது இல.
Your No. } ......................

මගේ අංකය
எமது இல.
My No. } ED 1/21/1/2/2

දිනය
திகதி
Date } 2007.10.08

சுற்றறிக்கை இல : **2007/21**

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்கள்.

## பாடசாலை சுகாதார அபிவிருத்தி வேலைத்திட்டம்

இலங்கையர்களில் விசேடமாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் சுகாதாரம் மற்றும் போசாக்கு பிரச்சினைகள் காணப்படுவதாக பல்வேறுபட்ட ஆய்வுகள் மற்றும் ஊடகங்கள் ஊடாக அறியக் கிடைத்துள்ளன. இந்நிலைமையை தீர்ப்பதற்காக பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ள முடியுமான பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் உட்பட பாடசாலை சமூகத்தின் சுகாதாரத் தரத்தை மேம்படுத்துவதற்காக சுகாதார அமைச்சின் உதவியுடன் நீடித்த நிரந்தர வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பாக இச்சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பாடசாலையில் தமது முழுமையான ஒழுங்கமைப்புகளின் பலத்தைப் பயன்படுத்தி பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் உட்பட பாடசாலை சமூகத்தின் சுகாதாரத் தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளமை இவ்வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். அதிபரினால் பாடசாலை சுகாதார விருத்தி வேலைத்திட்டத்திற்கான பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் உட்பட பாடசாலை சமூகத்தின் முழுமையான பங்களிப்பைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 2.0 நோக்கம்

மேற்கூறப்பட்ட பிரதான நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் கட்டாயமாக பாடசாலைகள் மூலம் மேற்கொள்ள வேண்டும்.

2.1 சுகாதார அபிவிருத்தி தொடர்பான பாடசாலை கொள்கைகளை வகுத்தல்.
2.2 பாடசாலை மாணவர்களின் சுகாதார தரத்தை விருத்தி செய்தலும் திறமைகளை அதிகரித்தலும்
2.3 பாடசாலைகளில் சுகாதார அபிவிருத்தித் திட்டத்திற்காக சிறந்ததொரு சூழலை ஏற்படுத்தல்
2.4 பாடசாலை சுகாதார அபிவிருத்தித் திட்டத்திற்காக பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் உட்பட பாடசாலை சமூகத்தின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல்
2.5 சுகாதார அமைச்சின் உதவியுடன் நடாத்தப்படும் பாடசாலை சுகாதார சேவை, பாடசாலை அபிவிருத்தியை பயன்மிக்கதாக மேற்கொள்ளல்.

## 3.0 பாடசாலைகளில் சுகாதார அபிவிருத்திக்காக கவனம் செலுத்த வேண்டிய அம்சங்கள்.

மேற்கூறப்பட்ட நோக்கத்தை அடைந்துகொள்வதற்கான வேலைத்திட்டங்களை திட்டமிடும்போது கீழ்க் குறிப்பிடப்பட்ட அடிப்படை அம்சங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும்.

3.1 பாடசாலை வளாகத்தை அழகுபடுத்தல் மற்றும் பாதுகாப்பான திருப்திகரமான சூழலாக பேணுதல்
3.2 மலசலகூடங்கள் மற்றும் சுத்தப்படுத்தலை பேணுதல் (இணைப்பு I)
3.3 குடிநீர் வசதிகளை பேணுதல்.
3.4 மாணவர் சுகாதார மற்றும் போசாக்குத் தரம் தொடர்பாக கவனம் செலுத்துதல்.
3.5 பாடசாலைகளில் உணவகம் மற்றும் சுகாதார பாதுகாப்பு உட்பட மாணவர் போசாக்குத் தரத்தை பேணுதல்.
3.6 பாடசாலை மாணவர்களுக்கு சிறந்த பாடசாலை சூழலை ஏற்படுத்தல்.

## 4.0 வேலைத்திட்டத்தை அமுல்படுத்தலும் மேற்பார்வையும்

வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக பாடசாலை மற்றும் பாடசாலைக்குரிய கல்வி நிறுவகத்தில் மிக வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக மாணவர் கழகம் மற்றும் சுகாதார விருத்திக் குழுக்களை நியமிப்பது அவசியமாகும்.

### 4.1 பாடசாலை சுகாதார அபிவிருத்தி மாணவர் கழகம்

பாடசாலை சுகாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை தீர்மானித்தலும் அமுல்படுத்துவதற்காகவும் பாடசாலை சுகாதார அபிவிருத்தி மாணவர் கழகங்கள் தாபிக்க வேண்டும். இதன்போது ஆரம்ப மற்றும் இடைநிலைப் பிரிவுகளுக்காக தனித்தனியாக சுகாதார அபிவிருத்தி மாணவர் கழகங்களை தாபிப்பது பொருத்தமானதாகும். பாடசாலை சுகாதார அபிவிருத்தி மாணவர் கழகங்களின் சகல பதவிகளும் மற்றும் பொறுப்புக்களும் மாணவர்களுக்கு வழங்கவேண்டும்.

#### 4.1.1 உள்ளடக்கம்

தலைவர், உபதலைவர், இணைச்செயலாளர்கள், பொருளாளர் மற்றும் செயற்குழு சபை உத்தியோகத்தர்கள் கொண்டதாக இருக்கவேண்டியதுடன் எந்தவொரு மாணவரும் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

#### 4.1.2 பாடசாலை சுகாதார அபிவிருத்தி தொடர்பாக வருடாந்தத் திட்டமிடல்களைத் தயாரித்து

- பாடசாலை சுகாதார அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்று அமுல்படுத்தல்.
- மாதாந்தக் கூட்டங்களை நடாத்துவதற்குரிய செயற்பாடுகள் மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் குழுத் திட்டங்களை அமுல்படுத்தலும் மேற்பார்வை செய்தலும்.
- சுகாதார அபிவிருத்தி மதிப்பீட்டு ஒப்பளவுகளுக்கமைய தேவைப்படும் மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.
- பாடசாலை சுகாதார தினத்தைப் பேணுதல்.

### 4.2 பாடசாலை சுகாதார அபிவிருத்தி ஆலோசனைக் குழு

#### 4.2.1 உள்ளடக்கம்

அதிபர் (தலைவர்)
சுகாதார வேலைத்திட்டத்திற்குப் பொறுப்பான பிரதி அதிபர் /பிரிவுப் பொறுப்பாளர் /உரிய ஆசிரியர்கள்
ஆரம்ப பிரிவினருக்கான பிரதி அதிபர் /தாபனப் பொறுப்பாளர்
ஆசிரியர்கள் உயர்ந்தபட்சம் 03 பேர்கள் (மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நியமிக்க அதிபருக்கு முடியும்.

(சுகாதார மற்றும் உடற்கல்வி வாழ்வியல் நிபுணத்துவம் /விஞ்ஞானம் அல்லது வேறு ஆசிரியராக இருக்க முடியும்.)
மாணவர் பிரதிநிதிகள் - பாடசாலை சுகாதார கழகங்களின் தலைவர், இணைச்செயலாளர்கள் மற்றும் பொருளாளர்கள் பெற்றோர் பிரதிநிதிகள் (உயர்ந்தபட்சம் 05 பேர்)
பொதுமக்கள் சுகாதார பரிசோதகர்
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
வெளி நலன்விரும்பிகள் (உயர்ந்பட்சம் இருவர்)

4.2.2 பொறுப்புக்கள்

பாடசாலை சுகாதார அபிவிருத்தி மாணவர் கழகங்களின் செயற்பாடுகளுக்கு வழிகாட்டல் வேலைத்திட்டங்களை வழங்குதலும் மேற்பார்வை செய்தலும் மீளுட்டல் பணிகளை மேற்கொள்ளுதலும் மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூட்டத்தை நடாத்தி பாடசாலை சுகாதார அபிவிருத்திக்காக ஈடுபடுத்தலும் செயற்பாட்டு சமூக பங்களிப்பு சுகாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களைப் பெற்றுக்கொள்ளலும்.

4.3 வலயக் கல்வி சுகாதார அபிவிருத்திக் குழு

4.3.1 உள்ளடக்கம்

வலயக் கல்விப் பணிப்பாளர் (தலைவர்)
வலயத்தின் சுகாதார வேலைத்திட்டத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் / உதவிக் கல்விப் பணிப்பாளர்
வலயத்தின் போசாக்கு வேலைத்திட்டத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் / உதவிக் கல்விப் பணிப்பாளர்
வலய ஆரம்ப பிரதிக் கல்விப் பணிப்பாளர் /உதவிக் கல்விப் பணிப்பாளர்
வலயத்தின் விசேட கல்விக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் /உதவிக் கல்விப் பணிப்பாளர்
மகப்பேற்று மற்றும் சிறுவர் சுகாதார வைத்திய அதிகாரி
பிரதேச நிருவாக பொதுமக்கள் சுகாதார பரிசோதகர்
நிருவாக பொதுமக்கள் சுகாதார பரிசோதகர்
சுகாதார கல்வி உத்தியோகத்தர்
சுகாதார வைத்திய அதிகாரி (வலயத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம்)
கோட்டக் கல்விப் பணிப்பாளர் (வலயத்திற்குரிய கல்வி அலுவலகங்கள்
கணக்காளர் (வலயக் கல்வி அலுவலகம்)
மாவட்ட சமுர்த்தி முகாமையாளர்கள்
04 அதிபர்கள்
(1AB பாடசாலை 01, 1C பாடசாலை 01, இரண்டு வகைகளையும் சேர்ந்த பாடசாலைகள் 01, 3 வகையின் பாடசாலை 01)

4.3.2 பொறுப்புக்கள்

- மூன்று மாதத்திற்கு ஒருமுறை வலய மட்டத்திலான கூட்டங்களை நடாத்தி பாடசாலை சுகாதார அபிவிருத்திக்குரிய செயற்பாடுகளை மதிப்பீடு செய்தலும் மேற்பார்வை செய்தலும்.
- பாடசாலை மட்டத்திலான வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்குத் தேவையான மீள் ஊட்டல்களை வழங்குதல்
- தேவைப்படும் உதவிச் சேவைகளை வழங்கும் நடவடிக்கைகளை எடுத்தல்.
- மேற்பார்வையின் போது விருதுகள் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளும் பாடசாலை ஆவணங்களை மாகாண குழுவுக்கு மற்றும் கல்வி அமைச்சிற்கு வழங்குதல்.

## 4.4 மாகாணக் கல்வி சுகாதார அபிவிருத்திக் குழு

### 4.4.1 உள்ளடக்கம்

மாகாணக் கல்விச் செயலாளர் (தலைவர்)
மாகாண சுகாதார செயலாளர்
மாகாண கல்விப் பணிப்பாளர்
மாகாண சுகாதாரப் பணிப்பாளர்
பிரதேச சுகாதார செயலகப் பணிப்பாளர்கள்
மகப்பேற்று மற்றும் சிறுவர் சுகாதார வைத்திய அதிகாரிகள் 1
மாகாண சுகாதார வேலைத்திட்டத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்
மாகாணத் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர்
மாகாண போசாக்கு வேலைத்திட்டத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்
மாகாண ஆரம்பக் கல்விப் பணிப்பாளர்
மாகாண விசேட கல்விப் பணிப்பாளர்
கணக்காளர் (மாகாணக் கல்வித் திணைக்களம்)
மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர்

### 4.4.2 பொறுப்புக்கள்

- தேசிய கொள்கைக்கமைய மாகாண மட்டத்தில் சுகாதார அபிவிருத்தி கொள்கைத் தீர்மானங்களை எடுத்தல்.
- ஒரு வருடத்தில் இரண்டு தடவை கூட்டங்களை நடாத்தி மாகாண மட்டத்திலான பாடசாலை சுகாதார அபிவிருத்திக்கு உரிய ஏற்பாடுகளை மேற்பார்வை செய்தல்.
- பாடசாலை வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்குத் தேவைப்படும் மீளூட்டல்களை வழங்குதல்.

## 4.5 தேசிய மட்டத்திலான கல்வி சுகாதார அபிவிருத்திக் குழு

### 4.5.1 உள்ளடக்கம்

கல்வி அமைச்சின் செயலாளர்
சுகாதார அமைச்சின் செயலாள்
தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம்
சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (சுகாதார சேவை)
சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பொது சுகாதார சேவை)
தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யும் அமைச்சின் செயலாளரினால் பெயரிடப்படும் உத்தியோகத்தர்
தகவல் ஊடகத்துறை அமைச்சின் செயலாளரினால் பெயரிடப்படும் உத்தியோகத்தர்
கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் (கல்வி பண்புசார் விருத்தி)
கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் (திட்டமிடல் மற்றும் செயற்சாதனை மீளாய்வு)
கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர்
குடும்ப சுகாதார பணியகத்தின் பணிப்பாளர்
சுகாதாரக் கல்விப் பணியகத்தின் பணிப்பாளர்
கல்வி அமைச்சின் சுகதார மற்றும் போசாக்கு வேலைத்திட்டத்திற்குப் பொறுப்பான பணிப்பாளர்.
கல்வி அமைச்சின் துறைசாரா மற்றும் விசேட கல்விப் பணிப்பாளர்
கல்வி அமைச்சின் விளையாட்டு மற்றும் உடற்கல்விப் பணிப்பாளர்

### 4.5.2 பொறுப்புக்கள்

தேசிய மட்டத்தில் பாடசாலை சுகாதார அபிவிருத்தி கொள்கைகளை தீர்மானித்தல்
வருடத்திற்கு இரண்டு தடவைகள் கூட்டம் நடாத்தி பாடசாலை சுகாதார அபிவிருத்திக்குரிய செயற்பாடுகளை மதிப்பீடு செய்தலும் மேற்பார்வை செய்தலும்
பாடசாலை வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்காகத் தேவைப்படும் மீளூட்டல்களை வழங்குதல்.
குழு தாபித்தல், உரிய கால எல்லைக்குள் குழுக்கூட்டத்தை நடாத்துதல், சகல குழுவினதும் தலைவர்களின் பொறுப்பாகும்.

5.0 மேற்பார்வை

பாடசாலைகளில் சுகாதாரக் கல்வி அபிவிருத்திக்காக கவனம் செலுத்தவேண்டிய நோக்கங்கள் மற்றும் அடிப்படை அம்சங்கள் அவ்வவ் பாடசாலைகளில் அமுல்படுத்தப்படும் சுகாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மதிப்பீடு செய்ய (இணைப்பு 2) உட்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்கு எட்டும் பாடசாலைகளை இனங்கண்டு அவற்றை மதிப்பீட்டிற்குட்படுத்துவதற்காக மதிப்பீட்டு சான்றிதழ்களை வருடாந்தம் கல்விப் பணிப்பாளரினால் வழங்கவேண்டும்.

5.1 வலய மேற்பார்வை சபை

வலய மட்டத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அல்லது அவரின் பிரதிநிதி சுகாதார வைத்திய அதிகாரி அல்லது அவரின் பிரதிநிதியை உள்ளடக்கக்கூடியவாறு வலயக் கல்விப் பணிப்பாளரினால் பெயரிடப்படும். நான்கு உத்தியோகத்தர்களைக் கொண்டதாக குழுவினால் மேற்கொள்ள வேண்டும். மேற்பார்வைப் படிவத்திற்கமைய அதிகமான புள்ளிகளைப் பெறும் பாடசாலைகளுக்காக வலய மட்டத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு சான்றிதழ்கள் வழங்கவேண்டும்.

100-80 புள்ளிகளுக்கிடைப்பட்ட தங்கவிருது சான்றிதழ்
79-70 புள்ளிகளுக்கிடைப்பட்ட வெள்ளிவிருது சான்றிதழ்
69-60 புள்ளிகளுக்கிடைப்பட்ட வெண்கலவிருது சான்றிதழ்
80 புள்ளிகளை விடக் கூடுதலாக வரும் பாடசாலைகள் தொடர்பான தகவல்களை கல்வி அமைச்சிற்கு வழங்கவேண்டியதுடன் அப்பாடசாலைகளை தேசிய மட்டத்தில் மதிப்பீட்டிற்குட்படுத்துவதற்காக உள்ளடக்கப்படும்.

5.2 தேசிய மதிப்பீட்டு சபை

கல்வி அமைச்சின் செயலாளரினால் பெயரிடப்படும் உத்தியோகத்தர் ஒருவர் சுகாதார அமைச்சின் செயலாளரினால் பெயரிடப்படும் உத்தியோகத்தர் ஒருவர் மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் பெயரிடப்படும் உத்தியோகத்தர் ஒருவர் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரினால் பெயரிடப்படும் உத்தியோகத்தர் ஒருவர் ஆகியோர்களை உள்ளடக்கியதாக அமையும். 80 புள்ளிகளுக்குக் கூடுதலாகப் பெறும் பாடசாலைகளுக்காக தேசிய மட்டத்திலான பாடசாலை சுகாதார அபிவிருத்தி வேலைத்திட்ட மதிப்பீட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

இவ்வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்காகத் தேவைப்படும் ஒத்துழைப்பை வழங்குவது சகல அதிபர்கள் ஆசிரியர்கள் பணியாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும்.

**ஆரியரத்ன ஹேவகே**
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதி :

1. செயலாளர் - சுகாதார அமைச்சு
2. செயலாளர் - தேசத்தைக் கட்டியெழுப்பும் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு.

## பாடசாலை சுகாதார அபிவிருத்தி வேலைத்திட்ட மேற்பார்வை ஒப்பளவுகள்

| ஒப்பளவுகள் | காட்டி | மதிப்பீட்டு மட்டம் | பெற்ற புள்ளிகள் | வகை |
|---|---|---|---|---|
| 1. பாடசாலை சமாதானக் குழு | 1. குழு உண்டு. அமுல்படுத்தப்பட்டுள்ளது<br>2. குழு உண்டு, அமுல்படுத்தப்படவில்லை<br>3. குழு இல்லை | 2<br>1 | | குழுவின் பெயர்ப்பட்டியல் மற்றும் கூட்டறிக்கையின் ஒப்பப் படிவம் |
| 2 மாணவர் சுகாதார சங்கம் | 1. சங்கம் உண்டு. மாணவர் பங்கேற்புடன் 100% செயற்பாடுகளில் ஈடுபடும். வருடாந்த திட்டமிடல் உண்டு<br>2 சங்கம் உண்டு. மாணவர் பங்கேற்பு 50% மாத்திரமாகும் செயற்பாடுகளில் வருடாந்த திட்டமிடல் உண்டு<br>3 சங்கங்கள் உண்டு. மாண்வர் பங்கேற்பு போதியளவு இல்லை. செயற்பாடுகளில் ஈடுபடுவது போதியளவு இல்லை வருடாந்த திட்டமிடல் உண்டு. | 3<br>2<br>1 | | மாணவர் சங்க அறிக்கை |
| 3 முதலுதவி வழங்குதல் | 1 மாணவர்களுக்காக முதலுதவி வழங்கும் செயற்பாடுகள் உண்டு. முதலுதவிப் பிரிவு உண்டு. அவசர சிகிச்சைக்காக முதலுதவி உபகரணங்களுக்கு பயிற்சி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உண்டு.<br>2 வசதிகள் கொண்ட முதலுதவிப் பெட்டி உண்டு செயற்பாடுகள் இல்லை<br>3 அவ்வாறான வசதிகள் இல்லை செயற்பாடுகள் உண்டு | 3<br>2<br>0 | | முதலுதவி உபகரண சிகிச்சை வழங்குவது தொடர்பான அறிக்கை ஆவணம் |
| 4 சுகாதார வைத்திய பரிசோதனை | 1 கடந்த ஆண்டு நடாத்தப்பட்டது. உரிய மாணவர்கள் சகலரும் சுகாதார வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.<br>2 SMI மேற்கொள்ளப்பட்டது. மாணவர்கள் 100%-80% மாத்திரமாகும்.<br>3 SMI மேற்கொள்ளப்பட்டது மாணவர்கள் 80%-50% மாத்திரமாகும்<br>4 வருடாந்தம் SMI மேற்கொள்ளப்படவில்லை. | 3<br>2<br>1<br>0 | | SMI அட்டை<br>MoH இன் பெயர்ப் புத்தகம் |
| 5 சுகாதார வைத்திய பரிசோதனை இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்காக நடவடிக்கை எடுத்தல் | 1 இனங்காணப்பட்ட மாணவர் பிரச்சினைகளுக்காக மீள் ஊட்டல் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பாக கண்டறியப்பட்டுள்ளது.<br>2 இனங்காணப்பட்ட மாணவர் பிரச்சினைகளுக்காக மீள் ஊட்டல் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | 3<br>2 | | சுகாதார பிரச்சினைக் குறிப்புப் படிவம்<br>H 456 குறிப்புப் படிவம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | இது தொடர்பாக கண்டறியப்படவில்லை.<br>3 இனங்காணப்பட்ட மாணவர் பிரச்சினைகளுக்காக மீள்ஊட்டல் கேள்வித் திட்டங்கள் இல்லை<br>4 தெளிவாகப் பிரச்சினைகள் தொடர்பாக தெரியாது | 1<br>0 | | |
| 6 பாடசாலை சுகாதார வேலைத்திட்டம் தொடர்பான சமூக பங்களிப்பு | 1 அதி உயர்மட்டத்தில் உள்ளது (60%) பாடசாலைத் தவணைக்கு ஒரு செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது<br>2 பங்கேற்பு குறைவு (30%)<br>3 பங்கேற்பு இல்லை | 3<br>1<br>0 | | வேலைத்திட்டத்திற்காக சமூகம்ளிக்கும் வீதாசாரம் |
| 7 பாடசாலைகளினால் மேற்கொள்ளப்படும் சமூக சுகாதார வேலைத்திட்டம் | 1 வருடாந்த செயற்பாடுகள் 3ஐ விடக் குறைவாக உள்ளது.<br>2 வருடாந்த செயற்பாடுகள் 2ஐவிடக் குறைவாக உள்ளது<br>3 வருடாந்த செயற்பாடுகள் 1ஐவிட மேலதிகமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>4 வருடாந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை | 5<br>3<br>2<br>0 | | அறிக்கைக் குறிப்பு |
| 8 உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் | 1 மாணவர் எண்ணிக்கைக்கு ஆசிரியர் எண்ணிக்கைக்கு போதியளவு பயன்படுத்த முடியுமான வசதிகள் உள்ளன. இருப்பினும் போதியளவு இல்லை<br>2 (80%) 3 உட்கட்டமைப்பு வசதிகள் கொண்ட இருப்பினும் போதியளவு இல்லை.<br>3 போதியளவு இல்லை (50%)<br>4 உட்கட்டமைப்பு வசதிகள் இல்லை. | 6<br>3<br>2<br>0 | | மாணவர் எண்ணிக்கைக்கு ஒத்ததாக இருக்கும் உட்கட்டமைப்பு வசதிகள் |
| 9 உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அவற்றை சுத்தப்படுத்தல் | 1 முறையாக திட்டமிடப்பட்டுள்ளது (நிர்மாணிக்கப்படவில்லை) சுத்தமாக பேணப்படுகின்றது. தொடர்ச்சியாக நீர் வசதிகள் வழங்கப்படுகின்றன<br>2 நீர் வசதிகள் உண்டு. பராமரிப்பு சூழல் உண்டு. சுத்திகரிப்பு முறையாகப் பயன்படுத்துவதில்லை. குடிப்பதற்கு சுத்தமான நீர் உண்டு.<br>3 நீர் வசதி உண்டு. பராமரிப்பு சூழல் இல்லை. சிக்கனமாக பயன்படுத்தப்படுகிறது. குடிப்பதற்கு சுத்தமான நீர் உண்டு<br>4 குடிநீர் வசதி உண்டு. பராமரிப்பு சூழல் இல்லை. சிக்கனமாக பயன்படுத்தப்படுகின்றது. சுத்தமான நீர் இல்லை. | 6<br>4<br>2<br>0 | | உட்கட்டமைப்பு வசதிகளை முன்னெடுக்கும் மட்டம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 நீர் வசதிகளை வழங்குதல் | 1 நீர் வசதிகள் உண்டு தொடர்ச்சியாக பராமரிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிக்கன முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. குடிப்பதற்குப் பொருத்தமான நீர் உண்டு. | 6 | | இருக்கும் நீர் வசதிகள் மற்றும் முன்னெடுத்தல் |
| | 2 நீர் வசதிகள் உண்டு பராமரிப்பு சூழல் இல்லை. சிக்கன முறைகள் பயன்படுத்தப்படுவதில்லை. குடிப்பதற்கு பொருத்தமான நீர் உண்டு. | 4 | | |
| | 3 நீர் வசதிகள் இல்லை. பராமரிப்பு சூழல் இல்லை. சிக்கனமான முறையில் பயன்படுத்துவதில்லை. குடிப்பதற்கு பொருத்தமான நீர் உண்டு. | 2 | | |
| | 4 நீர் வசதிகள் உண்டு பராமரிப்பு சூழல் இல்லை. சிக்கன முறைகள் பயன்படுத்தப்படுவதில்லை. குடிப்பதற்கு பொருத்தமான நீர் உண்டு. | 1 | | |
| | 5 நீர் வசதிகள் இல்லை. | 0 | | |
| 11 மாணவர் சமூகமளிப்பு | 1 கடந்த ஆண்டில் சாதாரண சமூகமளிப்பு 90% ஐ விட அதிகமானது. | 5 | | சமூகமளிப்பு ஆவணம் |
| | 2 சாதாரண சமூகமளிப்பு 90% – 80% இடைப்பட்டதாகும். | 3 | | |
| | 3 சாதாரண சமூகமளிப்பு 80% – 70% இடைப்பட்டதாகும். | 1 | | |
| 12 ஆசிரியர் சமூகமளிப்பு | 1 சாதாரண சமூகமளிப்பு 90% ஐ விட அதிகமாகும். | 5 | | சமூகமளிப்பு ஆவணம் விடுமுறை அறிக்கை |
| | 2 சாதாரண சமூகமளிப்பு 90% – 80% இடைப்பட்டதாகும். | 3 | | |
| | 3 சாதாரண சமூகமளிப்பு 80% – 70% இடைப்பட்டதாகும் | 1 | | |
| 13 வகுப்பறை சூழல் | 1 சகல வகுப்பறைகளும் முறையாக சுத்தமாக காற்றோட்டத்துடன் இருக்கின்றன. அதற்காக முறைகள் உள்ளன. | 5 | | பௌதிக சூழல் |
| | 2 வகுப்பறைகளில் 80% முறையாக சுத்தமாக காற்றோட்டத்துடன் இருக்கின்றன. | 3<br>2 | | |
| | 3 வகுப்பறைகளில் 50% முறையாக சுத்தமாக காற்றோட்டத்துடன் இருக்கின்றன. | 0 | | |
| | 4 வகுப்பறைகள் முறையாக சுத்தமாக காற்றோட்டத்துடன் போதியளவு இல்லை. | 0 | | |